4.05.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### வாய்ப்பு- டூஉழவர் உற்பத்தியாளர் நிறுவனம் துவக்க... டூவிவசாயிகளை ஊக்குவிக்க முயற்சி

வாலாஜாபாத்: 'உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனம்' துவக்குவதற்கு காஞ்சிபுரம் மாவட்ட விவசாயி களுக்கு வேளாண் வணிக துறை வாய்ப்பு அளித்துள்ளது. ஓராண்டு சிறப்பாக செயல்படும் உழவர் உற்பத்தி யாளர்கள் நிறுவனங்களுக்கு, மத்திய அரசின் இணை தொகை வழங்கி ஊக்குவிக்க, பரிந்துரை செய்யவும் அது முடிவு செய்துள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2 லட்சத்து 11 ஆயிரம் விவசாயிகள் உள்ளனர். இவர்களில், 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தோட்டக்கலை காய், கனி பயிர்களை விளைவித்தும்; சந்தைப்படுத்தியும் வருகின்றனர்.சலுகைகள் எஞ்சியுள்ள பெரும்பாலான விவசாயிகள், வேளாண் துறை சார்ந்த நெல் மற்றும் சிறு தானியங்கள் மற்றும் பயறு வகை பயிர்களை பயிரிட்டும்; விளை பொருட்களை சந்தைப்படுத்தியும், கணிசமான வருவாய் ஈட்டி வருகின்றனர். தங்களின் விளை பொருட்களை விவசாயிகளே சந்தைப்படுத்தும் அளவிற்கு முன்னேற்றம் அடைந்து இருப்பதால், வேளாண் வணிக துறை புதிய திட்டத்தை அமல்படுத்தி உள்ளது. இத்திட்டத்திற்கு 'உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனம்' என, பெயரிடப்பட்டு உள்ளது. இந்த நிறுவனத்தில் விளை பொருட்களை சந்தைப்படுத்துவதன் மூலம் விவசாயிகள், கணிசமாக லாபத்தை ஈட்ட முடியும். மேலும், இத்திட்டத்திற்கு, மத்திய அரசு பல்வேறு சலுகைகளை அளித்து உள்ளது. இந்த உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனத்தில், 1,000 விவசாயிகள் உறுப்பினர்களை ஒருங்கிணைக்க வேண்டும். ஒவ்வொரு

விவசாயியும், ஆயிரம் ரூபாய் பங்கு தொகையாக, இந்த உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும்.
இந்த நிறுவனத்தில் இணையும் விவசாயிகளுக்கு, வேளாண் வணிக துறை சார்பில், பல்வேறு பயிற்சிகள் மற்றும் மானியங்கள் வழங்கப்பட உள்ளது. பயிற்சி: இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெற விரும்பும் விவசாயிகளுக்கு, வேளாண் வணிக துறை துணை இயக்குனர் மூலமாக, 'உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனம்' துவக்குவதற்கான வழி காட்டி நெறிமுறை கள் அளிக்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது. இதுகுறித்து, வேளாண் வணிக துறை உயரதிகாரி ஒருவர் கூறும்போது: 'உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனம்' துவங்கி, ஓராண்டு நன்றாக செயல்படும் நிறுவனத்திற்கு, மத்திய அரசு இணைத் தொகையாக 9 லட்சம் ரூபாய் வழங்கி வருகிறது. முதல் கட்டமாக, தமிழகத்தில் 10 பின் தங்கிய மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டு உள்ளது. அதேபோல், நமது மாவட்டத்திற்கு வருவதற்கு வாய்ப்புகள் உள்ளன. அதற்குள் காஞ்சிபுரம் மாவட்டத்தில், 'உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனம்' துவங்கி செயல்பாட்டில் இருந்தால், மத்திய அரசு சலுகையை பெறுவதற்கு வழி கிடைக்கும். இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

## மே 6ல் பத்து இடங்களில் கஞ்சித்தொட்டி திறப்பு! விசைத்தறி தொழிலாளர் சங்கம் அறிவிப்பு

பள்ளிபாளையம் : கூலி உயர்வு பிரச்னையில் எவ்வித உடன்பாடும் ஏற்படாததால், விசைத்தறி தொழிலாளர் சங்கத்தினர், வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், வரும், 6ம் தேதி, பள்ளிபாளையம் பகுதியில், 10 இடங்களில் கஞ்சி தொட்டி திறக்கவும் முடிவு செய்துள்ளனர்.பள்ளிபாளையம் பகுதி முழுவதும், விசைத்தறி தொழில் பிரதான தொழிலாக உள்ளது. இத்தொழிலை நம்பி, ஒரு லட்சம்

தொழிலாளர்கள் உள்ளனர். அவர்களுக்கு, இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை, கூலி உயர்வு ஒப்பந்தம் போடப்படும். கடைசியாக போடப்பட்ட ஒப்பந்தம், கடந்த, மார்ச் மாதத்துடன் முடிந்தது.அதை தொடர்ந்து, 2015-17ம் ஆண்டுக்கு, புதிய கூலி உயர்வு ஒப்பந்தம் போடவேண்டும். நாமக்கல் மாவட்ட விசைத்தறி தொழிலாளர் சங்கம் சார்பில் கடந்த, இரண்டு மாதமாக கூலி உயர்வு பேச்சுவார்த்தைக்கு, ஜவுளி உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் அடப்புத்தறி நெசவாளர் சங்கத்தினரை அழைத்தனர்.பல்வேறு கட்ட பேச்சு வார்த்தையில், எவ்வித உடன்பாடும் ஏற்படவில்லை. அதை தொடர்ந்து, நாமக்கல் மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி தலைமையில் நடந்த முத்தரப்பு பேச்சு வார்த்தையிலும், உடன்பாடு எட்டவில்லை. அதனால், கடந்த, 26ம் தேதி முதல், பள்ளிபாளையம் பகுதியில், வேலை நிறுத்தம் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதுவரை நடந்த பேச்சு வார்த்தையில், உடன்பாடு ஏற்படாததால், கஞ்சி தொட்டி திறக்க விசைத்தறி தொழிற்சங்கத்தினர் முடிவு செய்துள்ளனர். இது குறித்து விசைத்தறி தொழிற்சங்கத்தின் மாவட்ட செயலாளர் மோகன் கூறியதாவது:30 சதவீதம் கூலி உயர்வு கேட்டு, கலெக்டர் முன்னிலையிலும், உள்ளூர் பகுதியிலும், பலகட்ட பேச்சு வார்த்தை நடந்தது. அதில், எவ்வித உடன்பாடும் ஏற்படவில்லை. அதை தொடர்ந்து, கடந்த, 26ம் தேதி முதல், வேலை நிறுத்தம் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம்.வரும், 6ம் தேதி முதல், பள்ளிபாளையம் பகுதியில், ஆவத்திபாளையம், அக்ரஹாரம், ஆவாரங்காடு, அம்மன்நகர், வசந்தநகர், காவேரி, புதுப்பாளையம், சத்யாநகர், காடச்சநல்லூர், வ.உ.சி., நகர் ஆகிய, பத்து இடங்களில், கஞ்சி தொட்டி திறக்க முடிவு செய்துள்ளோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தலையிட்டு, தொழிலாளர்கள் பிரச்னையை தீர்க்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

## ரூ.7.50 லட்சத்துக்கு வாழைத்தார் தேங்காய் விற்பனை

கோபி : கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், 7.50 லட்சம் ரூபாய்க்கு வாழைத்தார், தேங்காய் ஏலத்தில் நேற்று விற்பனையானது. கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் ஏலம் நடக்கும். கதளி ஒரு கிலோ ரூ.13.50, நேந்திரம் ரூ.20.30 விலைபோனது.செவ்வாழை தார் ரூ.600, தேன்வாழை 400, ரொபஸ்டா 200, ரஸ்த்தாளி 300, பூவன் 300, பச்சைநாடான் ரூ.320க்கு விலை போனது. விற்பனைக்கு வந்த எட்டாயிரம் தார்கள் மொத்தம் ரூ.6.50 லட்சத்துக்கு ஏலம் போனது. இதேபோல்,தேங்காய் ஏலமும் நேற்று நடந்தது. மொத்தம் எட்டாயிரம் காய் வந்தது. ஏழு முதல் 16 ரூபாய் வரை விலைபோனது. தேங்காய், ரூ.85 ஆயிரத்துக்க விற்பனை ஆனது.

## புல்லரிக்க வைக்கும் 'புட்பால் லில்லி'

கூடலூர் : கூடலூர் பகுதியில், பந்து போன்று பூத்துள்ள 'புட்பால் லில்லி மலர்கள்', சுற்றுலா பயணிகளை வியப்பில் ஆழ்த்தி வருகிறது.நீலகிரி மாவட்டம், கூடலூர் பகுதியில் கோடை காலத்தில், பல்வேறு வண்ண மலர்கள் உள்ளூர் மக்களையும், சுற்றுலா பயணிகளையும் கவர்ந்து வருகின்றன. தற்போது, இங்குள்ள தொரப்பள்ளி குணில் பகுதியில், சில வீட்டு தோட்டங்களில், பூத்துள்ள 'புட்பால் லில்லி மலர்கள்' வசீகரிக்கின்றன.'ஸ்காடோஸ் மல்டி பிலோரஸ்' என்ற தாவரவியல் பெயர் கொண்ட இம்மலர்கள், பந்து போன்று காட்சியளிக்கும். பூத்த பின்பு, ஒரு வாரம் வரை வாடாமல் இருக்கும்.

## வேளாண் வாழ்வாதார மேம்பாட்டு; பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு

ஊட்டி : 'நீலகிரியில் வேளாண் பொறியியல், தோட்டக்கலை துறை மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டு திட்டம் மூலம், 999 பணிகளுக்கு, 9.7 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது' என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் வேளாண் பொறியியல் துறை, தோட்டக்கலை துறை மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டு திட்டம் மூலம், நீர் வளம் பாதுகாத்தல், நில மேம்பாடு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை மேம்படுத்துதல், ஓடை சீரமைத்தல், வெள்ளம், நிலச்சரிவு தடுப்பு, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், நீர் வழங்கல் உட்பட வேளாண்மை, வாழ்வாதார மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.அப்பணிகளை மாவட்ட கலெக்டர் சங்கர் பார்வையிட்ட பின் கூறியதாவது: இந்த துறைகளின் மூலம், மொத்தம், 9.7 கோடி ரூபாய் மதிப்பில், 999 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில், 8.2 கோடி ரூபாய் மதிப்பில், 989 பணிகள் நிறைவு பெற்றுள்ளன; எஞ்சிய, 1.5 கோடி ரூபாய் மதிப்பில், 10 பணிகள் நடந்து வருகின்றன. இதில், மண் வள பாதுகாப்பு திட்டத்தின் கீழ், கம்பிவலை, படுக்கை, சிமென்ட் காரை தடுப்பணைகள் போன்றவை, 3.6 கோடி மதிப்பிலும், 33 கி.மீ., நீளத்திற்கு, 2.18 கோடி ரூபாய் மதிப்பில் ஓடை சீரமைப்புப் பணிகளும், 60.1 லட்சம் ரூபாய் மதிப்பில், நிலச்சரிவு தடுப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.உள் கட்டமைப்பு வசதியை ஏற்படுத்தும் திட்டத்தின் கீழ், நெல்லியாளத்தில் நடைபாதை, பேரகணியில் தடுப்புச் சுவர், கீழ் குந்தா, மணிகல், முள்ளிமலையில் குடிநீர் வழங்கல் பணிகள், கால்நடை பேணும் திட்டத்தில், ஊட்டி கால்நடை பண்ணையில், 20 லட்சம் ரூபாய் மதிப்பில் கால்நடை நீர் அருந்தும் குளம் உட்பட பல பணிகள் வேளாண் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்படுகிறது. ஊட்டி ஏரியை அழகுப்படுத்தும் திட்டத்தில், கோடப்பமந்து வாய்க்காலில்

கம்பி வலை தடுப்பணை, கம்பி வலை தடுப்பு சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், நில மேம்பாடு திட்டத்தில், நில சமன்பாடு, உழுவைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தில், ஆதி திராவிட, பழங்குடியின விவசாயிகளை உள்ளடக்கிய, 96 விவசாயிகளுக்கு, 11.22 லட்சம் ரூபாய் மதிப்பில், 5.61 லட்சம் ரூபாய் மானியத்துடன் களை எடுக்கும் கருவி, விசை தெளிப்பான், கைத்தெளிப்பான், தேயிலை கவாத்து மற்றும் அறுவடை செய்யும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. பேரகணியில் மக்களின் பங்களிப்புபடன், தடுப்புச்சுவர் கட்டப்பட்டுள்ளது. இவ்வாறு, கலெக்டர் சங்கர் கூறினார்.

**சோளம் சாகுபடி பணி தீவிரம்**

லாலாபேட்டை: மாயனூர் அடுத்துள்ள கட்டளை அமராவதி ஆற்றுப்பாசன விவசாயிகள், நெல் அறுவடை முடிந்த பின், சோளம் சாகுபடியில் தீவிரம் காட்டி வருகின்றனர். கரூர் மாவட்டம் ரெங்கநாதபுரம் பஞ்சாயத்துக்கு உட்பட்ட வீராக்கியம், கட்டளை, மாயனூர் ஆகிய பகுதிகளில் அமராவதி ஆற்றுப்பாசன விவசாய நிலங்களில் கடந்த மாதம் நெல் அறுவடை சாகுபடி பணிகள் நிறைவடைந்தது. தற்போது, 1,500க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில், சோளம் சாகுபடி பணிகள் நடந்து வருகிறது. நன்கு வளர்ந்த சோளம் நாற்றுகளை பிடுங்கி, தனியாக நடும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். நடவு செய்யும் போது, சோளம் பயிர் நன்றாக வளர்ந்து அதிகமான மகசூல் கிடைக்கும், என்று விவசாயிகள் கூறினர்.

**உழவர் உற்பத்தியாளர் கம்பெனி விவசாயத்தை பாதுக்க ஏற்பாடு**

வேடசந்துார்; மத்திய அரசு மற்றும் நபார்டு வங்கி சார்பில், மாவட்ட வாரியாக விளையும் முக்கிய பயிர்களின் <<உற்பத்தி மற்றும் அதற்கான விலையை நிர்ணயித்து பாதுகாக்கும் பொருட்டு, உழவர் உற்பத்தியாளர்

கம்பெனியை துவக்கும் பணிகள் ஒன்றிய வாரியாக நடந்து வருகின்றன. மத்திய அரசு, விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கிலும், விற்பனை செய்யக்கூடிய விளை பொருட்களை, இடைத் தரகர்கள் இன்றி நேரிடையாக விற்பனை செய்யவும் "உழவர் உற்பத்தியாளர் கம்பெனி' எனும் பெயரில் திட்டங்களை துவக்கி செயல்படுத்தி வருகிறது. இதற்காக நபார்டு வங்கி மற்றும் இந்திய அரசு சார்பில் பொருளாதார கடன் உதவிகள் செய்யப்படுகின்றன. சிறு விவசாயிகள் வேளாண் வணிக கூட்டமைப்பும் தேவையான நிதி உதவிகளை செய்கிறது. இதற்கான நிறுவனத்தை துவக்க உள்ள தனி நபர்கள் அல்லது தனியார் நிறுவனங்கள், மூன்று மாத காலத்திற்குள் 500 விவசாயிகளை தேர்வு செய்து உறுப்பினர்களாக்கி, அவர்கள் சார்பில் ரூ.10 லட்சத்தை "டெபாசிட்' செலுத்த வேண்டும். அவர்கள் கம்பெனி சார்பில் உரம், பூச்சி மருந்து, குளிர் சாதன கிட்டங்கி, தொழில் நுட்ப கருவிகளுக்கான கடைகளை அமைத்து தொழிலை விரிவு படுத்தலாம். இவர்களுக்கு அரசு சார்பில் ரூ.ஒரு கோடி வரை கடன் உதவியும், 80 சதவீத மான்ய உதவிகளும் கிடைக்க உள்ளது. இத்திட்டத்தின் கீழ் பழனி ஆயக்குடியில் கொய்யா பழத்திற்காகவும், ஆத்தூரில் காய்கறிகளுக்காகவும், நிலக்கோட்டையில் "பூ' வுக்காகவும், திருச்சி மாவட்டம் குளித்தலையில் நெல்லுக்காகவும் "உழவர் உற்பத்தியாளர்' நிறுவனங்கள் துவங்கி செயல்பட்டு வருகின்றன. குஜிலியம்பாறை ஒன்றிய பகுதியில் வெங்காயம், நிலக்கடலைக்காக விரைவில் நிறுவனம் துவங்க உள்ளது குறிப்பிடத்தக்கது. கோவிலூர் பூஜா பெண்கள் மேம்பாட்டு அறக்கட்டளை நிர்வாகி மகேந்திரன் கூறியதாவது: மத்திய அரசு மற்றும் நபார்டு வங்கி உதவியோடு, உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தை துவக்க <உள்ளோம். இதன் நோக்கமே, இடைத்தரகர்கள் இன்றி விவசாய தொழிலை மேம்படுத்துவதுதான், என்றார்.

## வறட்சியை தாங்கி வளரும் மாதுளை மாவட்ட விவசாயிகள் ஆர்வம்

கம்பம்: திராட்சையில் இருந்து வாழைக்கு மாறிய விவசாயிகள் தற்போது மாதுளைக்கு மாறத்துவங்கியுள்ளனர். தேனி மாவட்டத்தில் மா, கொய்யா, வாழை, திராட்சை உள்ளிட்ட பழ வகைகள் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. இருந்த போதும் பருவ மழை பொய்க்கும் போது, கிணறுகளில் தண்ணீர் வற்றி பிரச்னை ஏற்படுகிறது. கட்டுபடியான விலை கிடைப்பதில் சிக்கல்,நோய் தாக்குதல், விளைச்சல் குறைவு போன்றவற்றால் விவசாயிகள் சிக்கலை சந்திக்கின்றனர். குறிப்பாக திராட்சை சாகுபடியாளர்கள் கடும் நெருக்கடியை சந்திக்கின்றனர். திராட்சையில் இருந்து வாழைக்கு மாறினார்கள். ஆனால் வாழைக்கு கட்டுபடியான விலை கிடைக்காததால் தற்போது மாதுளைக்கு மாறத்துவங்கியுள்ளனர்.மாதுளை சாகுபடிக்கு தண்ணீர் அதிகமாக தேவையில்லை. வறட்சியை தாங்கி வளரக் கூடியது. நடவு செய்த இரண்டாவது ஆண்டின் இறுதியில் பலன் கொடுக்க துவங்கும். தொடர்ந்து குறைந்தது 10 ஆண்டுகளுக்கு பலன் தரும். ஒரு ஏக்கரில் ரூ. 3 லட்சம் வரை வருவாய் கிடைக்கும். பராமரிப்பு செலவுகள் பிற பயிர்களை ஒப்பிடும் போது மிக குறைவு. ஒரு ஏக்கருக்கு ரூ. ஒரு லட்சம் வரை செலவாகும். தோட்டக்கலைத்துறையினர் கூறியதாவது: தேனி மாவட்டத்தில் கூடலூர், உத்தமபாளையம், காமயகவுண்டன்பட்டி உள்ளிட்ட சில ஊர்களில் விவசாயிகள் மாதுளை சாகுபடியில் இறங்கியுள்ளனர். சிலர் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பே சாகுபடி செய்தனர். தற்போது மகசூல் எடுத்து நல்ல லாபம் சம்பாதித்துள்ளனர். மாதுளை சாகுபடி பரப்பு வரும் காலங்களில் தேனி மாவட்டத்தில் அதிகரிக்க வாய்ப்புள்ளது. மாவட்டத்தில் 100 ஏக்கர் வரை மாதுளை சாகுபடி செய்யப்பட்டுள்ளது, என்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வாழைத்தார் வரத்து குறைந்ததால் விலை அதிகரிப்பு செவ்வாழை ரூ.800-க்கு விற்பனை**



பொள்ளாச்சி மார்க்கெட் டுக்கு வாழைத்தார் வரத்து குறைந்ததால் விலை அதிகரித்து காணப்பட்டது. இதில் செவ்வாழைத் தார் அதிகபட்சமாக ரூ.800-க்கு விற்பனையானது.வாழைத்தார் ஏலம்

பொள்ளாச்சி மார்க்கெட் டில் வாரந்தோறும் ஞாயிற் றுக்கிழமை, வியாழக் கிழமை களில் வாழைத்தார் ஏலம் நடைபெறுகிறது. இந்த ஏலத் துக்கு பொள்ளாச்சி, ஆனை மலை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் இருந்து விவசாயி கள் வாழைத்தார்களை விற் பனைக்கு கொண்டு வருவார் கள். மேலும் பல்வேறு மாவட் டங்களில் இருந்தும் வாழைத் தார்கள் விற்பனைக்கு வரும்.நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் மார்க்கெட்டில் வாழைத்தார் ஏலம் நடை பெற்றது. ஏலத்துக்கு பல்வேறு இடங்களில் இருந்து சுமார் 2 ஆயிரம் வாழைத்தார்கள் கொண்டு வரப்பட்டன. ஏலத் தில் அதிகபட்சமாக பூவந்தார் ரூ.150 முதல் ரூ.400 வரைக்கும், கற்பூர வள்ளி ரூ.200 முதல் ரூ.450 வரைக்கும் செவ்வாழை ரூ.300- ரூ.800, மோரீஸ் ரூ.350- ரூ.400, நேந்திரம் கிலோ ரூ.25, கதளி கிலோ ரூ.16-க்கும் ஏலம் போனது.விலை அதிகரிப்பு இது குறித்து

மொத்த வியாபாரி ஒருவர் கூறியதா வது:-

பொள்ளாச்சி மார்க்கெட் டில் நடைபெறும் ஏலத்துக்கு சுமார் 3 ஆயிரம் வாழைத் தார்கள் வரும். நேற்று 2 ஆயிரம் தார்கள் தான் வந்தன. அதுவும் உள்ளூரில் இருந்து வரத்து மிகவும் குறைவாக இருந்தது. பெரும்பாலான தார்கள் வெளி மாவட்டங் களில் இருந்து தான் விற்பனைக்கு வந்தன. வரத்து குறைவாக இருந்ததால் விலை அதிகரித்து காணப்பட்டது. கடந்த வாரத்தை விட இந்த வாரம் ஒவ்வொரு ரக வாழைத்தாருக்கும் ரூ.10 முதல் ரூ.20 வரை விலை அதிகரித்து இருந்தது. இந்த விலை அதிகரிப்பு இனி வரும் காலங்களில் அதிகமாக இருக்கும்.இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாய குழுக்களுக்கு ரூ.45½ லட்சம் மதிப்பில் வேளாண்மை எந்திரங்கள் கலெக்டர் வழங்கினார்**



விவசாய குழுக்களுக்கு ரூ.45 லட்சத்து 66 ஆயிரம் மதிப்பில் வேளாண்மை எந்திரங்களை கலெக்டர் ராஜேஷ் வழங்கினார்.

உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத் தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையம் (பையூர்) சார்பாக விவசாயக் குழுக் களுக்கு வேளாண்மை எந்திரங் கள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி கலெக்டர் ராஜேஷ் தலைமையில் நடந் தது.இதில் வேளாண்மை எந்திரங்கள் மற்றும் உபகரணங் களை வழங்கி கலெக்டர் ராஜேஷ்

பேசியதாவது:- பயனளிக்கும் வகையில்.. தமிழ்நாடு அரசு நிதி ஒதுக் கீடு 36 லட்சத்து 66 ஆயிரம் மற்றும் விவசாயிகள் பங் களிப்பு 9 லட்சம் என ரூ. 45 லட்சத்து 66 ஆயிரம் மதிப்பில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படுகிறது. மாவட்டத் தில் பின் தங்கிய பகுதியான சூளகிரி வட்டாரம் வளர்ச்சி யில் மிகவும் பின் தங்கிய நிலையில் இருந்து வருகிறது. இங்கு விவசாயிகள் அதிகமான மானாவரி நிலத்தில் விவசாயம் செய்து வருகின்றனர். ஆட்கள் பற்றாக்குறையாக உள்ளது. அதனால் சரியான பரு வத்தில் வேளாண் பணிகளை மேற்கொள்வது கடினமாக உள்ளது. சிறு, குறு, விவசாயி களுக்கு பயனளிக்கும் வகை யில் இந்த வேளாண் எந்திரங் கள் வழங்கப்படுகிறது. இந்த வேளாண் எந்திரங்களை சூளகிரி வட்டாரத்தில் உள்ள காமன்தொட்டி, ஏனுசோனை, மற்றும் சானமாவு ஆகிய 3 ஊராட்சிகளில் உள்ள குக்கிராமங்களில் செயல்பட்டு வரும் விவசாயக் குழுக்களுக்கு வழங்கப்படுகிறது. நன்கு பயன்படுத்துங்கள் .ஒவ்வொரு விவசாயக் குழு விற்¢கும் தலா ஒரு மினி டிராக்டர் பவர் வீடர் டீசல் 2, பவர் வீடர் பெட்ரோல் 2, களை எடுக்கும் கருவி 2, மற்றும் 8 வகை இணைப்பு உபகரணங்கள் வழங்கப்படு கிறது. இதற்கான பராமரிப்பு செலவினங்களை குழுவானது வாடகையில் வரும் வருமானத் தில் செய்துக்கொள்ளலாம். இப்பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் தேவை யான வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிரில் சாகுபடி செய்யவும் அறுவடை மேற் கொள்ளவும், விவசாய பெருமக்கள் நன்கு பயன் படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு கலெக்டர் ராஜேஷ் கூறினார். இதில் பொது வேளாண்மைத் துறை இணை இயக்குநர் சபா நடேசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மந்திராசலம், மாவட்ட கலெக்டரின் நேர் முக உதவியாளர்( ஊரக வளர்ச்சி) கோபாலகிருஷ் ணன், வேளாண் பல்கலைக் கழக பேராசிரியர்கள் புத்தர், விஜயபாஸ்கரன், புதுவாழ்வு திட்ட மேலாளர் குமரன், மாவட்ட திட்ட அலுவலர் ஸ்ரீதரன், மற்றும் விவசாயிகள் கலந்து

கொண்டனர். இதைத் தொடர்ந்து கட்டி கானப்பள்ளி ஊராட்சியில் தூய்மை காவலர்கள் மூலம் குப்பை களை அகற்றும் பணி களை மாவட்ட கலெக்டர் ராஜேஷ் தொடங்கி வைத் தார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**விவசாயிகளின் குறைகளைக் கேட்க கிராமப்புறங்களுக்கு தில்லி பாஜக தலைவர் இன்று பயணம்**

விவசாயிகளின் குறைகளை கேட்டறிய தில்லி பாஜக தலைவர் சதீஷ் உபாத்யாய், வடக்கு தில்லியில் உள்ள கேதா காலன், பக்தவார்பூர் உள்ளிட்ட பல கிராமங்களுக்கு திங்கள்கிழமை (மே 4) பயணம் மேற்கொள்ள உள்ளார். இதுகுறித்து தில்லி பாஜக செய்தித் தொடர்பாளர் பிரவீன் சங்கர் கபூர், செய்தியாளர்களிடம் கூறியதாவது: தில்லியில் பருவம் தவறி மழை பெய்ததன் காரணமாக பயிர்களை இழந்து விவசாயிகள் வாடி வருகின்றனர். இதுவரை அவர்களுக்குரிய இழப்பீடுத் தொகையை தில்லி அரசு வழங்கவில்லை. இதையடுத்து பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் குறைகளை கேட்டறிய வடக்குத் தில்லி பகுதிகளுக்கு பாஜக தலைவர் சதீஷ் உபாத்யாய் திங்கள்கிழமை (மே 4) நேரில் செல்கிறார். வடக்கு, வடமேற்கு தில்லியில் உள்ள கேதா காலன், பக்தவர்பூர், பல்லா, ஹமீத்பூர், நரேலா, கோஹா, தாரியாபூர், குதுாப்கர், பஞ்சாப்கேதா, கிராம் மஜ்ரா, பேகம்பூர் ஆகிய பகுதிகளுக்கு நேரில் சென்று விவசாயிகளின் கருத்துகளை கேட்டறிய உள்ளார்.

இந்த பயணத்தில் சதீஷ் உபாத்யாய் உடன் வடமேற்கு தில்லி எம்.பி. டாக்டர் உதித் ராஜ், தெற்கு தில்லி எம்.பி. ரமேஷ் பிதுாரி உள்பட தில்லி பாஜக மூத்த தலைவர்கள் ஆகியோர் செல்கின்றனர் என்றார்.

மழையின் காரணமாக பயிர்களை இழந்து தவிக்கும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 20,000 இழப்பீடு தொகை வரும் 8-ஆம் தேதி முதல் வழங்கப்படும் என்று தில்லி அரசு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. மத்திய அரசின் திட்டங்களை விளக்க பாஜக செயல்வீரர்களுக்கு அழைப்பு மத்திய அரசின் சாதனைகள், திட்டங்கள், நிலம் கையகப்படுத்துதல் திருத்த சட்டம் ஆகியவை தொடர்பாக பொதுமக்களிடம் விளக்குமாறு செயல்வீரர்களுக்கு தில்லி பாஜக தலைவர் சதீஷ் உபாத்யாய் அழைப்பு விடுத்துள்ளார்.

தில்லி பாஜக சார்பில் புதுதில்லி மாவட்ட பயிற்சிக்கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பாஜக தலைவர் சதீஷ் உபாத்யாய் பேசியதாவது: மத்திய அரசு செயல்படுத்தும் திட்டங்கள், சாதனைகளை பொதுமக்களிடம் கொண்டு செல்லவும், தற்போது நிலம் கையகப்படுத்துதல் சட்டத்திருத்த மசோதா குறித்து பொது மக்களுக்கு எழுந்துள்ள சந்தேகங்களையும் பாஜகவினர் தெளிவுப்படுத்துவது அவசியம். இதேபோல மாநகராட்சி ஊழியர்கள் அடிப்படை கல்வி, சுகாதார வசதிகளை தில்லி மக்களுக்கு அளிப்பது அவசியம் என்றார். முன்னதாக இக்கூட்டம் தொடங்குவதற்கு முன் மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி, மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோரை சந்தித்து தில்லி பாஜகவினர் வாழ்த்துப் பெற்றனர்.

**தக்காளி, கத்தரிக்காய் ரூ.35, பட்டர், சோயா பீன்ஸ் ரூ.100**

வரத்து குறைவு காரணமாக மதுரை சந்தையில் காய்கறி விலைகள் உயர்ந்துள்ளன.கடந்த சில மாதங்களாக காய்கறி விலைகள் மிகவும் குறைந்து காணப்பட்டன. தக்காளி விலை மிகவும் மலிவாக இருந்தது. கத்தரிக்காய், வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற மக்கள் அதிகம் பயன்படுத்தும் காய்கறி வகைகளும் விலை குறைவாகவே இருந்து வந்தது. நல்ல தட்பவெப்பம் நிலவியதால், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் காய்கறிகள் அதிக அளவில் உற்பத்தியாகிக்

கொண்டிருந்தன. இதன் காரணமாக மதுரை சந்தைக்கு காய்கறி வரத்தும் அதிக அளவில் இருந்து. விலை மலிவாக இருந்ததால் பொதுமக்கள் அதிக அளவில் காய்கறிகளை வாங்கி பயன்படுத்தினர். இந்நிலையில் சமீபத்தில் பெய்த மழையால் இந்த நிலவரம் அடியோடு மாறியுள்ளது. கிலோவுக்கு ரூ.10 வரை மலிவாக விற்கப்பட்ட நாட்டுத் தக்காளி ரூ.35ஆக உயர்ந்துள்ளது. பெங்களூரு தக்காளி கிலோ ரூ.25 ஆக உயர்ந்து உள்ளது. இதே போல் கத்தரிக்காய், வெண்டைக்காய் ஆகியவற்றின் விலையும் கிலோவுக்கு ரூ.35 ஆக உயர்ந்து உள்ளது. உருளைக்கிழங்கு விலை கிலோ ரூ.30 ஆக இருந்தது. அவரைக்காய் விலை கிலோ ரூ.45 ஆக இருந்தது. பட்டர்பீன்ஸ், சோயா பீன்ஸ், பட்டாணி ரூ.100 ஆக உயர்ந்து விட்டது. காலிபிளவர் ஒன்று ரூ.20, முட்டைக்கோஸ் கிலோ ரூ.15, முருங்கைக்காய் கிலோ ரூ.40 ஆக விலை அதிகரித்து உள்ளதாக மதுரை மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த விற்பனை அங்காடி வியாபாரிகள் தெரிவித்தனர். அதே சமயம் பெரிய வெங்காயம் ரூ.16, சிறிய வெங்காயம் ரூ.22 என்ற அளவில் நீடிக்கிறது. கிலோ ரூ.30 ஆக இருந்த தேங்காய் விலையில் ரூ.1.50 குறைந்துள்ளது. அண்மையில் பெய்த மழை காரணமாக காய்கறி உற்பத்தி மிகவும் பாதிப்படைந்துள்ளது. வரத்து குறைந்ததால் விலை உயர்வு ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். மதுரை சித்திரைத் திருவிழா காரணமாகவும் காய்கறி விலைகள் உயர்ந்து இருப்பதாக அவர்கள் கூறினர்.

**மண் ஆய்வு, மண்மாதிரி சேகரிப்பு முகாம்**

பழனியை அடுத்த கோதைமங்கலத்தில் மண் ஆய்வு மற்றும் மண் மாதிரி சேகரிப்பு முகாம் நடைபெற்றது.இம்முகாமுக்கு, பழனி வேளாண்மை உதவி இயக்குநர் சாந்தாமணி முன்னிலை வகித்து, மண் ஆய்வின் அவசியம் பற்றி எடுத்துரைத்தார். மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் தங்கச்சாமி முகாமைத் தொடக்கி வைத்தார்.

பழனி வட்டாரத்தில் 39 வருவாய் கிராமங்களில் எப்பகுதியும் விடுபடாத வண்ணம், சுமார் 18 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் மண் மாதிரி சேகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இறவை சாகுபடி நிலங்களுக்கு 2.5 ஹெக்டேருக்கு ஒரு மண் மாதிரியும், புஞ்சை நிலங்களில் 10 ஹெக்டேர் பரப்புக்கு ஒரு மண் மாதிரியும் எடுக்கப்பட உள்ளது.நிகழ்ச்சியில், துணை வேளாண் அலுவலர், உதவி விதை அலுவலர்கள், அட்மா திட்ட அலுவலர்கள் பங்கேற்றனர்.

**மலைச்சாலையில் விற்கப்படும் மருத்துவ குணமுள்ள பழ வகைகள்**

கொடைக்கானலில் குறிப்பிட்ட பருவத்தில் மட்டுமே விளையும் மருத்துவ குணமுள்ள பழ வகைகள் பெருமாள் மலைப்பகுதியில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. இவற்றை சுற்றுலாப்பயணிகள் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர்.கொடைக்கானல் மலைப்பகுதிகளில் தனிச்சிறப்பு வாய்ந்த பழ வகைகள் விளைகின்றன. அவற்றில் சில மருத்துவக்குணம் கொண்டதாகவும் உள்ளன. இவை குறைவான நிலப்பரப்பிலும் குறிப்பிட்ட சில பருவங்களிலும் மட்டுமே விளைவதால் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. இவை விளையக்கூடிய பருவங்களிலும் மலைக்கிராமங்களில் மட்டுமே கிடைக்கின்றன. தற்போது பழனி-கொடைக்கானல் மலைச்சாலையில் உள்ள பழக்கடைகளில் அரிய வகை பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளன. இவை கோடைகாலத்தில் மட்டுமே கிடைக்கும் என்பதால் சுற்றுலாப்பயணிகள் இவற்றை ஆவலுடன் வாங்கிச்செல்கின்றனர். இதுகுறித்து பழக்கடை நடத்தி வரும் சுரேஷ் கூறியது: பழனி-கொடைக்கானல் மலைச்சாலையில் அஞ்சுவீடு வனப்பகுதியில் மக்காச்சோளம் போன்ற தோற்றத்துடன் உள்ள சைபேரி பழம் விளைகிறது. பச்சையாக விற்பனை செய்யப்படும் இது பழுத்தவுடன் மேற்பக்க செதில்கள் உதிரும். அதன்பின் உள்ளே இருக்கும் சுளையை சாப்பிடவேண்டும். இந்த பழம் மூல நோய்க்கும், குழந்தைபேரின்மைக்கும் மருந்தாகக் கூறப்படுகிறது. பழம் அதனுடைய

அளவைப் பொருத்து ரூ.60 முதல் ரூ.80 வரை விற்பனை செய்யப்படுகிறது. இந்தப்பழங்கள் இங்கு மட்டுமே கிடைக்கும். இவை தவிர சர்க்கரை வியாதியை கட்டுப்படுத்தும் பேஷன்புரூட், ரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தும் ட்ரீ டொமேட்டோ, வயிற்றுப்புண்ணை குணப்படுத்தும் பட்டர் புரூட் போன்றவையும் விற்பனை செய்யப்படுகிறது. பேஷன்புரூட் ஒன்று ரூ.10 முதல், பட்டர் புரூட் கிலோ ரூ.100, ட்ரீ டொமேட்டோ கிலோ ரூ.80 போன்ற விலைகளில் கிடைக்கிறது. மேலும் வால்பேரி, பீச்சர்ஸ், பிளம்ஸ் போன்றவையும் கிடைக்கிறது. இவற்றை சுற்றுலாப்பயணிகள் ஆர்வத்துடன் வாங்கிச்செல்கின்றனர் என்றார்.

**மானிய விலை உரங்களை விவசாயம் அல்லாத உபயோகத்திற்கு பயன்படுத்தினால் கடும் நடவடிக்கை**

மானிய உரங்களை விவசாயத்திற்கு அல்லாமல் மற்ற உபயோகத்தற்கு கடத்தினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட நிர்வாகம் எச்சரித்துள்ளது.இது தொடர்பாக விருதுநகர் மாவட்ட வேளாண்மைத்துறை இணை இயக்குநர் சுப்பையா சனிக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: விவசாய உபயோகத்திற்கான ரசாயன உரங்களுக்கு மத்திய அரசு மானியம் வழங்குகிறது.தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட கலவை உரங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் மட்டுமே மானிய உரங்களை மூலப்பொருளாக பயன்படுத்தலாம். இது தவிர்த்து மானியத்தில் வழங்கும் உரங்களை மற்ற உபயோகங்களுக்கு பயன்படுத்தினால் சட்டப்படி குற்றமாகும்.மானியத்தில் வழங்கப்படும் யூரியா, பேப்பர் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், சர்க்கரை ஆலைகள், பிவிசி பைப்புகள், கதவுகள், ஸ்டீல், மாட்டுத் தீவனம் தயார் செய்யும் நிறுவனங்களிலும், கழிவு நீர் சுத்திகரிக்கும் நிலையங்களிலும் பயன்படுத்தப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தொழிற்சாலை உபயோகத்திற்கு டெக்னிகல் கிரேடு யூரியாவினைத்தான் வாங்கி பயன்படுத்த வேண்டும். இதர டிஏபி, பொட்டாஷ் போன்ற உரங்களை தொழிற்சாலைகளிடம் இருந்து முழு விலையில் வாங்கி உபயோகிக்கலாம். மானிய விலையில் வழங்கப்படும் எந்த உரத்தையும் பிற பயன்பாடுகளுக்கு பயன்படுத்தக்கூடாது.மாநில அரசு இந்த உரங்களுக்கு 4 சதம் வரிவிலக்கு அளித்துள்ளது. எனவே தென்மாநில அளவில் தமிழகத்தில் உரங்களின் விலை குறைவு என்பதால் பிற மாநிலங்களுக்கு கடத்துவதற்கான வாய்ப்பு உள்ளது.எனவே அரசு விதிமுறை மீறி உரங்களை பக்கத்து மாநிலங்களுக்கு கடத்துதல், தொழிற்சாலை உபயோகத்திற்கு பயன்படுத்துதல் போன்றவை தெரியவந்தால் அத்திவாசியப்பொருள் சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

**மஞ்சூர் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் தேயிலைக்கு கோட்டா முறை**

நீலகிரி மாவட்டம், மஞ்சூர் பகுதியிலுள்ள கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் கோட்டா முறை அறிவிக்கப்பட்டுள்ளதற்கு விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.மஞ்சூர் பகுதியிலுள்ள 8 கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் 15,000 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். கடந்த சில ஆண்டுகளாக பசுந்தேயிலைக்கு கட்டுப்படியாகக் கூடிய விலை கிடைக்காததால், தோட்ட உரிமையாளர்கள் தங்களது தோட்டங்களை பராமரிக்க முடியாமல் திணறி வருகின்றனர்.இதனிடையே, பசுந்தேயிலை வரத்து அதிகரிக்கும் போதெல்லாம் கோட்டா முறையை அமல்படுத்துவதை கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளும் வாடிக்கையாக வைத்துள்ளது. பொதுவாக கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் உள்ள நவீன இயந்திரங்களில் மூன்று ஷிப்ட் முறையில் நாளொன்றுக்கு 40,000 கிலோ பசுந்தேயிலை வரை அரைக்கும் திறன் உள்ளது. ஆனால், நாளொன்றுக்கு 20,000 கிலோ பசுந்தேயிலை மட்டுமே கொள்முதல்

செய்யப்பட்டு வருகிறது. அதிகமாக இலை வரும்போதெல்லாம் கோட்டா முறை அமல்படுத்தப்படுகிறது.தற்போது, மஞ்சூர் அருகேயுள்ள மேற்குநாடு கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையில் கோட்டா முறை அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல, மஞ்சூரிலுள்ள கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையிலும் ஒரு லட்சம் கிலோ வரையில் பசுந்தேயிலை தேக்கமடைந்துள்ளதால் அங்கு பசுந்தேயிலை கொள்முதல் நிறுத்தப்பட்டுள்ளது.இத்தகைய பிரச்னைகளால் மஞ்சூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் தற்போது பசுந்தேயிலை மகசூல் அதிகரித்திருந்தாலும், கோட்டா முறையின் காரணமாக இத்தோட்டங்களிலுள்ள பல லட்சம் கிலோ பசுந்தேயிலை பறிக்கப்படாமலேயே வீணாகும் அவலம் ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பாக, கூட்டுறவுத் துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி உயர் அதிகாரிகளுக்கு மனு அனுப்பப்பட்டுள்ளது.

**56 கிராமங்களைச் சேர்ந்த 2,800 பேருக்கு கறவை மாடுகள்**

திருவண்ணாமலை மாவட்டத்தில் 56 கிராமங்களைச் சேர்ந்த 2,800 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்துள்ளார். தமிழகத்தில் ஏழைப் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது. அதன்படி, ஒரு பயனாளிக்கு கறவை மாடு வாங்க ரூ.30 ஆயிரம், இதர செலவினம் ரூ.6,250 என மொத்தம் ரூ.36,250 தமிழக அரசால் வழங்கப்படுகிறது.இந்தத் திட்டத்தின்படி, திருவண்ணாமலை மாவட்டத்தில் ஒரு நிதியாண்டுக்கு 14 கிராமங்களைச் சேர்ந்த 700 பயனாளிகள் வீதம் கறவை மாடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன்படி, 2011-12, 2012-13, 2013-14, 2014-15ஆவது நிதியாண்டுகளில் கடந்த பிப்ரவரி மாதம் வரை மொத்தம் 56 கிராமங்களைச் சேர்ந்த 2,800 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்துக்காக மாவட்டத்தில் இதுவரை ரூ.9 கோடியே 90

லட்சத்து 52 ஆயிரத்து 600 செலவிடப்பட்டுள்ளது.இந்தத் திட்டத்தால் ஏழைப் பெண்களின் வாழ்க்கைத் தரமும், பொருளாதாரமும் உயர்ந்துள்ளது. மாவட்டத்தில் விடுபட்டவர்களுக்குத் தொடர்ந்து கறவை மாடுகள் வழங்கப்படும். கறவை மாடுகளைப் பெற்றுள்ள பெண்கள் அதைச் சிறப்பான முறையில் வளர்த்துப் பயன்பெற வேண்டும் என்று ஆட்சியர் அ.ஞானசேகரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

**கறிக்கோழி விலை உயர்வு:பண்ணையாளர்கள் மகிழ்ச்சி**

மீன்பிடி தடை காரணமாக கறிக்கோழி கொள்முதல் விலை 4 மாதங்களில் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளதால் கறிக்கோழி பண்ணையாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.பல்லடம் கறிக்கோழி ஒருங்கிணைப்புக் குழு கட்டுப்பாட்டில், கோவை, ஈரோடு, நாமக்கல், கிருஷ்ணகிரி, ராமநாதபுரம், தூத்துக்குடி, பல்லடம், நாகர்கோவில் உள்ளிட்ட மாவட்டங்களில் சுமார் 75 லட்சம் கறிக்கோழிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இதில், மாதந்தோறும் 5 கோடி கிலோ அளவுக்கு கறிக்கோழி உற்பத்தி செய்யப்படுகின்றன.தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டத்தின்படி, கடலில் மீன் வளத்தை பாதுகாக்கும் பொருட்டு, திருவள்ளூர் மாவட்டத்தில் இருந்து கன்னியாகுமரி மாவட்ட கடல் பகுதி வரை, ஏப்ரல் 15 முதல் மே 29-ஆம் தேதி வரை 45 நாள்களுக்கு மீன் பிடிப்பு தடை செய்யப்பட்டுள்ளது.

அதனால், கறிக்கோழி மற்றும் முட்டை விற்பனை தற்போது அதிகரித்துள்ளது. கடந்த ஜனவரி தொடங்கி ஏப்ரல் மாதம் வரை கறிக்கோழி கொள்முதல் விலை அதிகபட்சம் கிலோ ரூ.86 என்ற நிலையில் இருந்தது. மே 2-ஆம் தேதி முதல் கறிக்கோழி விலை கிலோ ரூ.94 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.கடந்த ஆண்டு கேரளத்தில் ஏற்பட்ட பறவைக் காய்ச்சல் பாதிப்பால் அம் மாநிலத்துக்குக் கறிக்கோழிகளை அனுப்ப முடியாமல் சுமார் 1 மாத காலம் கடும் இழப்பைச் சந்தித்த கறிக்கோழி பண்ணையாளர்களுக்கு இந்த விலை

உயர்வு மகிழ்ச்சியை அளித்துள்ளது.மீன்பிடி தடை, பள்ளிகள் விடுமுறையால் இறைச்சி நுகர்வு அதிகரித்துள்ளதால், தற்போது கறிக்கோழி விலை உயர்ந்துள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

**விவசாயக் குழுக்களுக்கு ரூ.46 லட்சத்தில் வேளாண் இயந்திரங்கள் அளிப்பு**

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயக் குழுக்களுக்கு ரூ.45.66 லட்சத்தில் வேளாண் இயந்திரங்களை அண்மையில் மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் வழங்கினார்.காவேரிப்பட்டணம் அருகே பையூர் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக மண்டல ஆராய்ச்சி மையம் சார்பில், விவசாயக் குழுக்களுக்கு வேளாண் இயந்திரங்கள், உபகரணங்கள் வழங்கும் விழா ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தலைமை வகித்துப் பேசியது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பின் தங்கிய பகுதியான சூளகிரி வட்டாரம் வளர்ச்சியிலும் பின் தங்கி உள்ளது. இந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் அதிகளவு மானாவரியில் சாகுபடி செய்து வருகின்றனர். ஆள்கள் பற்றாக்குறை உள்ளது. இதனால், சரியான பருவத்தில் வேளாண் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது.இந்த விவசாயிகளின் நலன் கருதி அதிக மகசூல், சரியான விளைச்சல், சரியான பின்செய் நேர்த்திகள் செய்ய வைக்கும் நோக்கில், சிறு, குறு, விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகையில் வேளாண் இயந்திரங்கள் வழங்கப்படுகிறது. சூளகிரி வட்டாரத்தில் உள்ள காமன்தொட்டி, ஏனுசோனை, சானமாவு ஆகிய 3 ஊராட்சிகளில் உள்ள குக்கிராமங்களில் செயல்பட்டு வரும் விவசாயக் குழுக்களுக்கு இந்த இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு விவசாயக் குழுவுக்கும் தலா ஒரு மினி டிராக்டர், பவர் வீடர் டீசல் 2, பவர் வீடர் பெட்ரோல் 2, களை எடுக்கும் கருவி 2 மற்றும் 8 வகை இணைப்பு உபகரணங்களும் வழங்கப்படுகின்றன.

இந்த இயந்திரங்கள் இப்பகுதி விவசாயிகளுக்குத் தேவையான வேளாண், தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்யவும், அறுவடை மேற்கொள்ளவும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றார்.

வேளாண்மைத் துறை இணை இயக்குநர் சபா நடேசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் மந்திராசலம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (ஊரக வளர்ச்சி) கோபாலகிருஷ்ணன், வேளாண் பல்கலைக் கழக பேராசிரியர்கள் புத்தர், விஜயபாஸ்கரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**"உணவு தானிய உற்பத்தி இலக்கு 1.06 லட்சம் டன்**

கரூர் மாவட்டத்தின் உணவு தானிய உற்பத்தி இலக்காக 1.06 லட்சம் மெட்ரிக் டன்னாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி தெரிவித்துள்ளார்.இதுதொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:கரூர் மாவட்டத்தின் கோடை கால சராசரி மழையான 64.30 மி.மீட்டருக்கு இதுவரை 89.86 மி.மீ. கிடைக்கப் பெற்றுள்ளது. இது சராசரி மழை அளவைக்காட்டிலும் 25.6 மி.மீ. கூடுதல். கோடைப்பருவத்தில் இதுவரை 95 எக்டேரில் நெல்லும், 3,098 எக்டேரில் சிறுதானிய பயிர்களும், 3,769 எக்டேரில் பயறுவகை பயிர்களும், 3,795 எக்டேரில் எண்ணெய் வித்துப்பயிர்களும் சாகுபடி செய்யப்பட்டு வளர்ச்சி மற்றும் அறுவடை நிலையில் உள்ளது.கரூர் மாவட்டத்தில் 2014-15-ம் நிதியாண்டில் 74,328 எக்டேரில் வேளாண் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தின் உணவு தானிய உற்பத்தி இலக்காக 1.06 லட்சம் மெட்ரிக் டன் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பயிர் மகசூல் காரணிகள் கணக்கீடு முறையில் கணிக்கப்பட்டுள்ள மகசூல்படியும் அனைத்து உணவு தானியப் பயிர்களில் மொத்த உற்பத்தி 1.50 லட்சம் மெட்ரிக் டன் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் நிதியாண்டில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் 78.44 மெட்ரிக் டன் சான்று பெற்ற நெல் விதைகள் 1570 விவசாயிகளுக்கு ரூ. 8.06 லட்சம் மானிய உதவி வழங்கப்பட்டது. சிறுதானிய உற்பத்தியைப் பெருக்குவதற்காக ரூ.15.64 லட்சம் மதிப்பில் மானியம் மற்றும் இடுபொருட்கள் உதவியாக 500 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. பயறுவகை பயிர்களின் உற்பத்தியைப் பெருக்கிட துவரை நாற்று விட்டு நடுவதற்கு எக்டேருக்கு ரூ. 7,500 வீதம் 400 விவசாயிகளுக்கு ரூ.30 லட்சம் மானிய உதவியாக வேளாண் துறை சார்பில் அனைத்து வட்டாரங்களிலும் வழங்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள அனைத்து தனியார் உரக்கடைகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களில் யூரியா-1,360 மெ.டன், டிஏபி-312 மெ.டன், பொட்டாஷ்-677 மெ.டன், கலப்பு உரங்கள்-754 டன் உரங்கள் இருப்பில் உள்ளன என்றார் அவர்.

**நொய்யல் பாசன விவசாயிகள் சங்கக் கூட்டம்**

விவசாயிகளின் பிரச்னைகளை தீர்க்கவும், விவசாயிகள் ஒற்றுமையை நிரூபிக்கவும் வரும் சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிடுவது என கரூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நொய்யல் பாசன விவசாயிகள் சங்க கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சங்க மாவட்டத் தலைவர் ராமசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், அனைத்து நிர்வாகிகளும் பங்கேற்றனர்.

இதில் உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி அமைக்கப்பட்ட சுற்றுப்புறச்சூழல் இழப்பீட்டு ஆணையத்தை கலைக்கும் மத்திய அரசின் முயற்சியை இந்தக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

ஆணையத்திற்கு உடனடியாக தலைவர் நியமனம் செய்ய வேண்டும். நொய்யல் ஆற்றில் தொடர்ந்து கலக்கும் திருப்பூர் சாயக்கழிவு நீரை தடுக்காத சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். நல்ல நீரை பாசனத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். யூகலிப்டஸ் வளர்க்கும் விவசாயிகளிடம் புகளூர் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித ஆலை செய்துகொண்ட

ஒப்பந்தத்தின்படி நிலுவையில் உள்ள வருடாந்திர தொகையை விவசாயிகளுக்கு உடனடியாக வழங்க வேண்டும்.விவசாயிகளின் பிரச்னையை தீர்க்கும் வகையிலும், விவசாயிகளின் ஒற்றுமையை நிருபிக்கும் வகையிலும் வரும் சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிடுவது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**கறவைமாடு வளர்க்கும் விவசாயிகளுக்கு தாது உப்பு கலவைப் பயிலரங்கு**

திருநெல்வேலியில் கறவை மாடு வளர்ப்போர்களிடையே தனுவாசு தாது உப்புக் கலவை தாக்கம் குறித்த பண்ணையாளர்கள் பயிலரங்கு நடைபெற்றது. கறவைமாடு வளர்ப்போர்களிடையே தனுவாசு தாது உப்புக் கலவையை பிரபலப்படுத்தும் திட்டம் வடிவமைக்கப்பட்டு, தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய கால்நடை விரிவாக்க கல்வித் துறை மூலம் கடந்த ஓராண்டு நடைமுறைப் படுத்தப்பட்டது. இம்மாவட்டத்தில், மேலச்செவல், சொக்கட்டான்தோப்பு, தச்சநல்லூர், களக்குடி, அயன்சிங்கம்பட்டி, சுரண்டை, சங்னாப்பேரி, வெள்ளாளங்குளம், துரைச்சாமிபுரம், கீழப்புலியூர் உள்ளிட்ட கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒரு கிராமத்துக்கு கறவை மாடுகள் வளர்க்கும் 500 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர். பயனாளிக்கு 2 கிலோ வீதம் மூன்று தவணையாக 6 கிலோ தனுவாசு தாது உப்புக் கலவை வழங்கப்பட்டது. தாது உப்புக்கலவையின் தாக்கம் குறித்து பால் உற்பத்தி மூலம் ஆராய்ச்சி செய்யப்பட்டது. இந்த ஆராய்ச்சி பயன்குறித்து அனைத்து விவசாயிகள் அறியும் வகையில் புதன்கிழமை திருநெல்வேலி ராமையன்பட்டியில் உள்ள கால்நடை விரிவாக்க கல்விக் கூடத்தில் இப்பயிலரங்கு நடைபெற்றது. பயிலரங்குக்கு கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் சே. பிரதாபன் தலைமை வகித்து பயிலரங்க மலரை வெளியிட்டார். தேசிய வங்கியின் உதவி பொதுமேலாளர் கா. ராமலிங்கம் பேசினார்.

கால்நடை பண்ணை வளாகத் தலைவர் வெ. தனசீலன் வாழ்த்திப் பேசினார். திட்டம் குறித்து முதன்மை ஆராய்ச்சியாளர் சே. செந்தில்குமார் பேசினார். விஞ்ஞானிகள், பயனாளிகள் பங்கேற்ற கலந்துரையாடல் நடைபெற்றது. பயிலரங்கில் பங்கேற்ற பயனாளிகளுக்கு சான்று வழங்கப்பட்டது. விரிவாக்க கல்வித் துறைத் தலைவர் சி. மணிவண்ணன் வரவேற்றார். உணவியல் துறை உதவிப் பேராசிரியர் ந. அருள்நாதன் நன்றி கூறினார்.

**வேளாண் இடுபொருள்களுக்கான சட்ட விழிப்புணர்வு கருத்தரங்கு**

திருநெல்வேலியில் வேளாண் இடுபொருள்கள் தரக்கட்டுப்பாடு சட்டங்கள் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது. திருநெல்வேலி மாவட்டத்தில் வேளாண் இடுபொருள்களை விற்பனை செய்து வரும் பாளையங்கோட்டை, ஆலங்குளம், பாவூர்சத்திரம் வட்டாரங்களில் உள்ள கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனையாளர்களுக்கான இந்த விழிப்புணர்வு கருத்தரங்கு திருநெல்வேலி வேளாண் விற்பனைக் குழு அலுவலகத்தில் நடைபெற்றது.இக்கருத்தரங்கிற்கு தலைமை வகித்து திருநெல்வேலி வேளாண் இணை இயக்குநர் செ. சந்திரசேகரன் பேசியதாவது: அரசுக்கும், விவசாயிகளுக்கும் பாலமாகத் திகழும் வேளாண் இடுபொருள்கள் விற்பனையாளர்கள், விவசாயிகளுக்கு சரியான தகவலை அளிக்க வேண்டும்.தரமான இடுபொருள்களை வழங்க வேண்டும். வேளாண் தரக்கட்டுப்பாடு சட்டங்களை முறையாக கடைபிடிக்க வேண்டும் என்றார் அவர்.வேளாண் உதவி இயக்குநர் இரா. கஜேந்திரபாண்டியன் பேசுகையில், ""உர விற்பனை உரிமம் காலாவதி தேதிக்குள் புதுப்பிக்கப்பட வேண்டும். உரங்களுக்கு அனுமதிக்கப்பட்ட விலை, இருப்பு விவரம் போன்ற தகவல்களை அறிவிப்பு பலகையில் வெளியிட வேண்டும். விவசாயிகள் கொள்முதல் செய்யும் இடுபொருள்களுக்கு ரசீது வழங்கி கையெழுத்து பெற வேண்டும்'' என்றார்.கருத்தரங்கில், தரக்கட்டுபாட்டு வேளாண் அலுவலர்

அ. கற்பகராஜ்குமார், வேளாண் அலுவலர்கள் ராமர், கீதா உள்ளிட்டோர் பேசினர். பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களின் செயலர்கள், தனியார் நிறுவன உர விற்பனையாளர்கள் பங்கேற்றனர்.

தினகரன்

**சிறந்த வருவாய் பெற்றுத் தரும் வெண்பன்றி வளர்ப்பு அதிகரிப்பு**

திருச்சி, : பண்ணையாளர்கள் தரம் உயர்த்தப்பட்ட வெண்பன்றி இனங்களை தேர்வு செய்து வளர்த்து வருவதால் புள்ளி விவர கணக்கெடுப்பின்படி, சாதாரண நாட்டுப் பன்றிகள் எண்ணிக்கை குறைந்து வருவதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது.கடந்த 2012 ஆண்டு எடுக்கப்பட்ட 19வது கால்நடை புள்ளி விவர கணக்கெடுப்பின் படி, பன்றிகளின் எண்ணிக்கை 10.29 மில்லியன் ஆகும். இது மொத்த கால்நடைகளின் எண்ணிக்கையில் 2.01 சதவீதம் ஆகும். 2003 மற்றும் 2008 ஆண்டு கணக்கெடுப்பில், பன்றி களின் எண்ணிக்கை முறையே 14 மில்லியன் மற்றும் 12 மில்லியன் ஆகும். பன்றிகளின் எண்ணிக்கை குறைந்து வருவதற்கு காரணம் தற்போது பண்ணையாளர்கள் தரம் உயர்த்தப்பட்ட வெண்பன்றி இனங்களை தேர்வு செய்து வளர்த்து வருவதாகும்.இந்த வெண்பன்றி இனங்கள் வேகமாக வளர கூடிய தன்மை கொண்டவை. புறக்கடை வளர்ப்பு மூலம் பன்றிகள் வளர்ப்பது குறைந்து தற்போது வணிகரீதியான வெண்பன்றி பண்ணைகள் அதிகமாக காணப்படுகிறது. இதனால் வெளி நாட்டு இனங்கள் மற்றும் தரம் உயர்த்தப்பட்ட இனங்கள் 2.8 சதவீதம் உயர்ந்து, உள்நாட்டு இனங்கள் மற்றும் நாட்டு பன்றிகளின் எண்ணிக்கை 10.37 சதவீதம் குறைந்து வருகிறது. ஐக்கிய நாடுகளின் சபையின் உணவு வேளாண்மை நிறுவனம் 2012 கணக்கெடுப்பின்படி, இந்தியாவின் பன்றி இறைச்சி

உற்பத்தியானது 0.32 மில்லியன் டன் ஆகும். இது உலக உற்பத்தியின் 0.3 சதவீதம் ஆகும். கடந்த 15 வருடங்களில் பன்றி இறைச்சி மற்றும் பன்றி இறைச்சியில் இருந்து தயார் செய்யும் மதிப்பூட்டிய பொருட்களின் உற்பத்தி 3.03 சதவீதம் அதிகரித்துள்ளது.நம் நாட்டில் பன்றி வளர்ப்பு ஒரு பின்தங்கிய தொழிலாகவே நெடுங்காலமாக இருந்து வந்தது. ஆனால் கடந்த 10 ஆண்டுகளில் இந்நிலை மாறி வெண்பன்றி வளர்ப்பு ஒரு பெரிய வியத்தகு தொழிலாக உருவெடுத்து வருகிறது. கிராமங்கள் முதல் நகரங்கள் வரை வெண் பன்றி பண்ணைகள் பெருகி வருகின்றன. மக்கள் சமீப காலங்களில் வெண்பன்றி இறைச்சி உண்பதில் ஆர்வம் காட்டி வருகின்றன. வெண்பன்றி வளர்ப்பு தொழில் குறைந்த முதலீட்டில் அதிக லாபம் என்ற குறிக்கோளுடன் இருந்து வருகிறது.வெண்பன்றி வளர்ப்பில் படித்த இளைஞர்கள் உள்ளிட்ட பலரும் ஆர்வம் காட்டி வருகின்ற னர். வெண்பன்றி இனங்கள், இனவிருத்தி பராமரிப்பு, கொட்டகை அமைத்தல், தீவன மேலாண்மை, பன்றிக்குட்டிகள் பராமரிப்பு, நோய் தடுப்பு முறைகள், வெண்பன்றி உற்பத்தி திறனை அதிகரிக்கும் வழிமுறைகள், வெண்பன்றி இறைச்சி மற்றும் மதிப்பூட்டிய இறைச்சி பொருட்கள், பண்ணை பொருளாதாரம், பதிவேடுகள் பராமரிப்பு மற்றும் தொழில் நுட்ப விவரங்களை அறிந்து கொள்வது இன்றியமையாதது.

வெண்பன்றி இறைச்சி உற்பத்தியானது இந்தியாவில் குறைவாக அதாவது சுமார் 7 சதவீத மாக நாட்டின் விலங்கின் புரத உற்பத்தியின் ஆதாரமாக உள்ளது. வெண்பன்றி வளர்ப்பு, இறைச்சி உற்பத்தி இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் அதிக அளவு செறிந்து காணப் படுகிறது. இப்பகுதியில் முக்கிய புறக்கடைகளில் தொழில் முறை சாராத வகையிலும் வளர்க் கப்பட்டு வருகின்றன.இது குறித்து திருச்சி கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத் தலை வரும், பேராசியருமான ரிச்சர்டு ெஜகதீசன், உதவி பேராசிரியர் ஷிபிதாமஸ் ஆகியோர் கூறுகையில்,மக்கள் இடையே உள்ள மதசம்பந்தமான

கோட்பாடுகளும், பன்றியினத்தின் மீது ஏற் பட்டுள்ள அறுவெறுப்பும், பன்றிகள் வளர்க்கப்படும் சூழ்நிலையும் பன்றி இறைச்சி உற்பத்தி முன்னேற்றத்திற்கு தடையாக இருந்து வந்தது. ஆனால் இப்பொழுது இந்நிலை படிப்படியாக மாறி வருகிறது. மேலைநாடுகளுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது, இந்தியாவில் பன்றியினம் நன்றாக பராமரிக்கப்படாத இனமாகவே உள்ளது. மேலும் நம் நாட்டில் குறிப்பிட்டு சொல்லும்படியாக எவ்வித இனங்களும் இல்லை. பன்றி வளர்ப்பு என்றாலே அறுவெறுப்படையும் நமது மக்கள் அதனை வளர்ப்பதன் மூலம் கிடைக்கும் லாபத்தையும், எளிய முறை வளர்ப்பையும் கருத்தில் கொள்ள வேண்டும்.பன்றி வளர்ப்பில் குறைந்த முதலீட்டில் அதிக லாபம் அடையலாம். சமையலறை உணவு கழிவுகள், திருமண மண்டபம் மற்றும் கல்லூரி விடுதிகளில் இருந்து பெறப்படும் கழிவுகளை கொண்டும் வளர்க்கலாம். பராமரிப்பு முறை எளிது. பன்றிகள் சிறந்த தீவன மாற்றுதிறன் கொண்டவை. பன்றி இறைச்சி உற்பத்தியின் சதவீதம் 6570 ஆகும். சினைப்பருவம் 3 மாதம், 3 வாரங்கள் மற்றும் 3 நாட்கள் மட்டுமே. வருடத்தில் 2 முறை பன்றிகள் குட்டி ஈனும். இத்தகைய சிறப்பம்சங்கள் கொண்ட இத்தொழிலை சிறு விவசாயிகள், நிலமற்றோர் மேற் கொண்டு அதிக லாபம் ஈட்டலாம். குடும்பத் தலைவி, சுய உதவிக்குழுவினர், பள்ளி படிப்பை பாதியிலேயே விட்டவர்கள் இத்தொழிலலை மேற்கொள்ளலாம் என்றனர்.தரம் பாதிக்கும்...இறைச்சிக்காக வளர்த்த பன்றிகளை தகுந்த முறையில் பண்ணையில் இருந்து இறைச்சி கூடத்திற்கு கொண்டு வரவேண்டும். துாரம் குறைவாக இருப்பின் நடைப்பயணமாகவும் கொண்டு வரலாம். மிதமான தட்பவெப்பம் நிலவும் நேரங்களில் பன்றிகளை வாகனங்களில் தேவையான இடவசதி அளித்து அனுப்புதல் வேண்டும். அதிக வெப்பமான வேளையில் பயணம் செய்தால் இளைப்பு ஏற்பட்டு, எடை குறைந்து இறைச்சியின் தரத்தை பாதிக்கும். சில சமயம் இறப்பு கூட ஏற்படும். வண்டியில் ஏற்றும் போதும், இறக்கும் போதும்,

கவன மாக பன்றிகளை கலவரப்படுத்தாமல், அடிக்காமல், துன்புறுத்தாமல், சிராய்ப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.